<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | **251/2019** | சாட்சியம் | **:** | **WW2** |
| **Name** | **:** | திரு**. Sasi Kumar** | | | |
| **Date** | **:** | **22.10.2024** | | | |
| **Time** | **:** | **4.32 P.m to 5.01 P.m** | | | |

<u>தொ**.**த**.**சா**.2.** திரு**.Sasi Kumar** என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்**.** குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

sasikumar.sadhur@gknautomotive.com என்பது என்னுடைய ஈமெயில் ஐ.டி என்றால் ஆமாம். அது நிர்வாகத்தால் எனக்கு வழங்கப்பட்டது. என்னிடம் காட்டப்படுவது நான் 01.10.2024 அன்று நிர்வாகத்திற்கு அனுப்பிய இ-மெயில் என்றால் ஆமாம். அது நி.சா.ஆ.1. எனக்கு தற்காலிகமாக 2014 ஆம் ஆண்டு டீம் லீடர் என்ற பொறுப்பு கொடுக்கப்பட்டது. 2014 இல் இருந்து தற்போது வரை நிர்வாகம் என்னை டீம் லீடர் என்று தான் அழைத்து வருகிறது என்றால் ஆமாம். எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பெர்ஃபார்மென்ஸ் போர்டல் உள்ளது. ஆப்பரேட்டர்களுக்கு விடுப்பு வழங்குவதற்கு கேட் பாஸ் வழங்குவதற்கு டூல்ஸ் ரிஸீப்ட் பாஸ் வழங்குவதற்கு எனக்கு அக்சஸ் உள்ளது என்றால் இல்லை. Tools யை Team Leader வாங்குவார்கள் ஆப்பரேட்டர்களும் வாங்குவார்கள். ஒரு டீம் லீடர் ஏழு லைன்களுக்கு இன்சார்ஜ் என்றால் தெரியாது நான் வேலை செய்யும் பிளான்ட்டில் ஒரு லைன் மட்டும் தான் உள்ளது. நான் வேலை செய்யும் பிளான்ட்டில் ஒரு சூப்பர்வைசர் உள்ளார். ஒரு சிப்டுக்கு ஒரு சூப்பர்வைசர். ஒரு ஷிப்டுக்கு நான்கு டீம் லீடர்கள் இருப்பார்கள். நான் வேலை செய்யும் மெஷினுக்கு ஒரு டீம்

லீடர் தான். நான் Warm Form மெஷினில் வேலை பார்க்கிறேன். Warm Form மெஷினில் மொத்தம் எத்தனை ஆப்பரேட்டர்கள் என்றால் ஆறு பேர். தினமும் ஷிப்ட் தொடங்கும் போது மீட்டிங் வைப்போம் என்றால் ஆமாம் . மீட்டிங்கை நான் நடத்த மாட்டேன் நடக்கும் மீட்டிங்கில் நான் கலந்து கொள்வேன். Performance Development Plan வருடா வருடம் நான் வழங்குவேனா என்றால் கடந்த ஆறு ஆண்டுகளாக இரண்டு வருடத்திற்கு ஒரு முறை தான் வழங்கப்பட்டு வருகிறது. PDP அடிப்படையில் தான் டீம் லீடர்களுக்கு சம்பளம் மறு ஆய்வு செய்யப்பட்டு வழங்கப்படுகிறது என்றால் ஆமாம். PDP என்பது டீம் லீடருக்கு மட்டுமல்ல தொழிற்சங்கம் தொடங்குவதற்கு முன்னர் தொழிலாளர்களுக்கும் சேர்த்துதான். எனக்கு முன்னர் சாட்சியம் அளித்தவர் தொழிற்சங்கம் தொடங்குவதற்கு முன்னர் தொழிலாளர்களுக்கும் சேர்த்து PDP இருந்தது என்ற விவரத்தை சொல்லி உள்ளாரா என்றால் தெரியாது. தொழிலாளர்களுக்கு ஒப்பந்த முன்னிலைக்கு மூன்று வருடத்திற்கு ஒருமுறை ஊதியம் திருத்தி வழங்கப்படுகிறது என்றால் ஆமாம். டிப்ளமோ தொழிலாளர்களுக்கும் சேர்த்து ஊதிய உயர்வு ஒப்பந்தம் தொழிற்சங்கம் மூலம் ஏற்படுத்தப்பட்டு 2015ல் அதன் முன்னிலைக்கு ரூபாய் 1800 குறையாமல் கொடுக்கப்பட்டது. அது தொ.சா.ஆ.9 ஆகும். அந்த ஒப்பந்தத்தில் டீம் லீடருக்கு பொருந்தும் என்ற சரத்து உள்ளதா என்றால் இல்லை. ஒப்பந்தத்தின் அடிப்படையில் டீம் லீடர்களுக்கு ஒவ்வொரு வருடமும் தொழிலாளர்களுக்கு மூன்று வருடத்திற்கு ஒருமுறை ஊதிய உயர்வு வழங்கப்பட்டு வருகிறது என்றால் இல்லை. கடந்த ஆறு ஆண்டுகளாக இரண்டு வருடத்திற்கு ஒரு முறை தான் ஊதிய உயர்வு வழங்கப்பட்டு வருகிறது. அதுவும் தொழிற்சங்கத்தின் தலையீட்டின் பேரில் தான்

அந்த வழங்கப்பட்டு வருகிறது. அந்த காலகட்டத்தில் நான் PDP வழங்காத காரணத்தினால் ஊதிய உயர்வு நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது என்றால் ஆமாம்.

தொடர்ச்சி வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.

Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:22.10.2024